அன்புடையீர், வணக்கம்.

***கீழ்வரும் ஆய்வு-வினா உங்கள் அன்பான கவனத்திற்கு!***

**2021 ஏப்ரல் 2-ஆம் நாள் தொடங்கி, எதிர் வரும் ஆயிரம் நாட்களில், நம் தமிழகத்தை, உலகத் தரத்திற்கு உயர்த்துவதே இவ்வினா ஆய்வின் நோக்கம்!**

1. நீங்கள் ஒரு இந்திய குடிமகனா?

2. நீங்கள் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்வது, ஓர் **இந்தியக் குடிமகன்** என்பதாலா?
அல்லது ஒரு **தமிழன்** என்பதாலா?

3. தற்போது நடைபெறும் திட்டங்கள் மற்றும் குறிக்கோள்களில், **எந்தச் செயற் திட்டம்**, தமிழகம் அல்லது நம் நாட்டை அடுத்த கட்டத்திற்கு உயர்த்தப் போவதாக நீங்கள் நினைக்கிறீர்கள்?

4. நம் மாநிலம் **நல்ல வளர்ச்சி அடைந்திருக்கிறதா** இல்லையா என்பதைப்பற்றிய உங்கள் கருத்து என்ன?

5. நம் மாநிலத்தின் '**தரமான கல்வி**' என்பதைப் பற்றிய உங்கள் கருத்து என்ன?

6. கீழ் வரும் துறைகளில் நம் மாநிலம் முன்னேறி இருக்கிறதா?

| **எண்** | **துறைகள்** | **ஆம்** | **இல்லை** |
|---|---|---|---|
| 1 | நம் மாநிலத்தில் நல்ல தொழில் வளர்ச்சி உள்ளது. | | |
| 2 | நம் மாநிலத்தில் நல்ல விவசாய வளர்ச்சி உள்ளது. | | |
| 3 | சமூக நல்வாழ்வு நன்றாக உள்ளது. | | |
| 4 | உள்க் கட்டமைப்பு /அடிப்படை வசதி நன்றாக உள்ளது | | |
| 5 | கல்வித் தரம் நிறைவாய் உள்ளது | | |
| 6 | இயற்கை வளங்கள் நிரம்பியுள்ளது | | |
| 7 | பெண்கள் மற்றும் குழந்தைகள் நல்வாழ்வு உள்ளது | | |
| 8 | குடிமக்களின் கல்வித்தரம் நிறைவாய் உள்ளது | | |
| 9 | வாக்காளரின் உரிமைகள் சரியாகப் பயன் படுத்தப் படுகிறது | | |
| 10 | வேலை வாய்ப்பு திருப்தியாய் உள்ளது | | |

7. உங்களுக்கு உங்கள் அரசாங்கத்தைப் பற்றிய தனிப்பட்ட மதிப்பீடு உண்டா?

8. உங்கள் மாநிலத்தின் அரசியற் கட்சிகளைப் பற்றியத் தனிக் கருத்து உங்களுக்கு உண்டா?

9. ஒரு சராசரி குடிமகன், தன் மாநிலத்தின் வளர்ச்சியில் பங்கு கொள்ள முடியுமென நம்புகிறீர்களா?

10. உங்கள் மாநிலத்தின் ஐந்து முக்கிய வளர்ச்சிப் பணிகளாக நீங்கள் கருதுபவை யாவை?
1. 2. 3. 4. 5.

11. மதத்தினை அரசியலோடு இணைத்துச் செயற்படுவது பற்றி உங்கள் கருத்து என்ன?

12. உங்களுடைய மாநிலம் உலகத் தரத்தில் வளர்ச்சியடைவதை விரும்புகிறீர்களா?

13. கல்லூரியில் படிக்கும் பிள்ளைகள் உங்களுக்கு இருக்கிறார்களா?
அவர்களின் விடலைப் பருவ வாழ்க்கை, பண்பாடு, தகுதி, குணநலன்கள் மற்றும் பழக்க-வழக்கங்களைப் பற்றி மதிப்பீடு செய்திருக்கிறீர்களா?

14. பள்ளியில் பணி புரியும் ஆசிரியர்களின் அறிவு மற்றும் கற்பிக்குந் திறன் உயர வேண்டும் எனக் கருதுகிறீர்களா?

15. நம் மாநிலத்தில் விவசாயத் தொழில் இப்போதைவிட மேலும் வளர்ச்சி அடைய முடியுமா?

16. நம் மாநிலக் காவல்த் துறையின் மதிப்பு தற்போது எவ்வாறுள்ளது? மேலும் அதன் மதிப்பை உயர்த்த முடியுமா? உங்கள் யோசனைகளை என்ன?

17. கொரோணாக் காலத்தில் நம் மாநிலத்தில் ஏற்பட்டிருக்கிற வேலை வாய்ப்பின்மையைப் பற்றி

உங்கள் கருத்து என்ன?

18. நம் மாநிலத்துக்கே உரிய தனிச் சிறப்புகளாக நீங்கள் கருதுபவை என்ன?

19. நம் மாநிலத்தின் வளர்ச்சியில் தமிழகப் பொதுமக்கள் உண்மையிலேயேப் பங்கு கொள்ள இயலுமா?

20. உங்கள் மனதில் நம் மாநில வளர்ச்சி குறித்து வேறு ஏதேனும் கேள்விகள் தோன்றுகின்றனவா? அவ்வாறெனில் உங்கள் மேலான சிந்தனைகளை இங்கே தெரிவியுங்கள்.

21. உணவிற்கான மாளிகைப் பொருட்கள் கலப்படம் இல்லாமல் இருக்கிறதா?

22. பெட்ரோல் டீசல் விலை ஏறுவதால் விலைவாசி உயர்வு ஏற்படும் எனக் கருதுகிறீர்களா?

23. தொழிற்கல்வி பள்ளியளவில் கற்றுத் தருவது பயனுள்ளதாக இருக்குமென நினைக்கிறீர்களா?

24. மக்களால் தேர்ந்தெடுக்கப் படும் பிரதிநிதிகள் மக்களின் அடிப்படை வசதிகளில் உள்ள குறைகளை உண்மையில் கவனம் செலுத்தித் தீர்த்து வைக்கிறார்களா?

25. தமிழகத்தில் வேலை வாய்ப்பின்மையும் கல்வித் தகுதிக்குக் குறைவான வேலையும் கிடைப்பதாகக் கருதுகிறீர்களா?

26. அப்பழுக்கற்ற ஒழுக்கம் நாம் தேர்ந்தெடுக்கும் மக்கள் பிரதிநிதிகளிடம் இருக்கிறதா?

27. காவல்த்துறை, கட்சி மற்றும் அதிகாரிகள் தலையீடின்றிச் சுதந்திரமாகப் பணியாற்ற முடிகிறதா?

28. வருவாய்த்துறை, பதிவுத் துறை மற்றும் கிராம அலுவலர்கள் நேர்மையாகப் பணியாற்றுகிறார்களா?

29. விவசாயிகள் தங்கள் உழைப்பிற்கேற்ற வருமானம் பெறுகிறார்களா?

30. சிறுதொழில் செய்வோர், குறைந்த வட்டிக்கு, வங்கிக் கடன் கிடைக்காததால் கந்து வட்டிப் பிடியில் சிக்கிச் சீரழிவதாய் நினைக்கிறீர்களா?

பேரா. A. விஜய குமார்
தலைமை நெறியாளர், தலைவர் , இந்தியா ட்ரஸ்ட், சென்னை 600101
**95000 05541** avkindiatrust2020@gmail.com

**<u>தாங்கள் சொல்ல விரும்பும் பிற கருத்துக்கள்:-</u>**